



# பெற்றோராயிருத்தல் கடினமானதாக இருக்க முடியும்...
## ...உதவியும், ஆதரவும் சிறந்ததோர் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

## பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் திட்டம் என்பது யாது?

உங்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கையில் ஒரு நல்ல ஆரம்பத்தை நீங்கள் வழங்குவதற்கு உதவக்கூடிய ஆதரவையும் சேவைகளையும் பிரகாசம்மிக்க எதிர்காலங்கள் திட்டம் (Brighter Futures Program) உங்களுக்கு வழங்குகிறது. குடும்பப் பிரச்சினைகள் இன்னும் மோசமான நிலைக்குச் செல்வதை இது தடுக்கின்றது.

இத்திட்டத்தினூடாக வழங்கப்படும் சேவைகளுள் குழந்தைகள் பராமரிப்பு, விளையாட்டுக்குழுக்கள், வீட்டு வருகை, மற்றும் பெற்றோர் குழுக்கள் என்பனவும் உள்ளடங்கும். இத்திட்டத்தில் இணைந்துகொள்வது சுயவிருப்பத்திலாகும்.

நமது பிள்ளைகள் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கவேண்டுமென்பது நம் அனைவரதும் விருப்பமாகும். பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் திட்டம் பல்வேறுபட்ட அநேக குடும்பங்களுக்கு ஆதரவளிக்கின்றது.

சில குடும்பங்கள் போதைப்பொருள், மது பாவனைப் பிரச்சினைகளால் கஷ்டப்படுகின்றன, மற்றும் சில, குடும்ப வன்முறையை அனுபவிக்கின்றன. பல பெற்றோர்கள், குடும்பத்தினதும் நண்பர்களினதும் ஆதரவு கிடைக்காமல் குழந்தை வளர்ப்பினைக் கடினமானதாகக் காண்கின்றனர்.

brighter futures
A NSW Government
early intervention initiative

## இத்திட்டம் எனக்கு ஏற்றதா?

DoCS தொலைபேசி உதவி இணைப்பிற்கு உங்கள் பிள்ளைகள் தொடர்பாகக் கிடைத்த அறிக்கையொன்று இத்திட்டத்தின் மூலம் உங்கள் குடும்பத்திற்கு உதவி தேவைப்படலாம் எனக் கருதுகிறது.

பிள்ளை வளர்ப்பினை எவ்வாறு நீங்கள் சமாளிக்கிறீர்கள் என்பது பற்றியும், நீங்கள் எதிர்நோக்கும் ஏதும் கஷ்டங்கள் தொடர்பாக நீங்கள் உதவி பெற விரும்புகிறீர்களா என்பது பற்றியும் நீங்கள் எம்முடன் பேசலாம்.

## பிரகாசம்மிக்க ஏதிர்காலங்கள் திட்டம் உங்களுக்குத் தேவையான சேவைகளை நீங்கள் பெற்றுக்கொள்ள உதவும்.



*“நான் எட்டு வயதிற்குட்பட்ட மூன்று பிள்ளைகளைக்கொண்ட ஓர் ஒற்றைத் தாய். எனது குடும்பத்தவர்கள் எவரும் அண்மையில் இல்லை என்னால் எதனையும் சமாளிக்க முடியவில்லை என்பதாலும், எனது கோபத்தை நான் எனது பிள்ளைகள் மீது காட்டியதற்காகவும் மிகவும் வருந்தினேன். தற்போது வாரத்தில் நான்கு மணி நேரத்திற்கு ஒரு வீட்டு வருகையாளர் என்னிடம் வருகிறார். நட்புடன் செவிமடுக்கக்கூடிய ஒருவர் கிடைத்தமை எனது வாழ்க்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. எனது பிள்ளைகள் தற்போது முன்பைவிட மிகவும் மகிழ்ச்சியோடுள்ளனர். நிலைமைகள் கஷ்டமானதாக இருக்கும் போது என்னுடன் பேசுவதற்கு எனக்கு ஒருவர் இருக்கின்றார்.”*







## ...உதவியும், ஆதரவும் சிறந்ததோர் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

## இத்திட்டம் எவ்வாறு செயற்படுகிறது?

**பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் பணியாளர் உங்கள் குடும்பத்தின் சிறப்பம்சங்கள் யாவை, உங்களுக்கு சிரமமாய் உள்ளவை எவை என்பன பற்றி உங்களுடன் பேசுவார். உங்களுக்கு எத்தகைய ஆதரவுகள் கிடைக்கின்றன, எப்பிரச்சினையை, எந்த ஒழுங்கில் நீங்கள் எதிர்கொள்ள வேண்டும், போன்றன பற்றி நீங்கள் பேசலாம்.**

**உங்கள் குடும்பத்திற்கேற்ற சரியான சேவைகளையும், உதவியையும் நாம் இணைந்து திட்டமிடுவோம்.**



*“ஸாம் எப்போதும் வேண்டுமென்றே என்னைக் கோபமூட்ட முயற்சிப்பதாக நான் நினைத்தேன். அவ்வாறே, நான் அவனை நடத்திய விதம் குறித்து பெருமைப்படவுமில்லை. பிள்ளை வளர்ப்புத் திட்டத்திற்கு நான் போக ஆரம்பித்ததன் பின், அவன் செய்வது மிகச் சாதாரணமானதே எனப் புரிந்துகொண்டேன். ஸாமின் நடத்தை குறித்து கோபப்பட்டு அவன் மீது கோபத்தைக் காட்டுவதை விட, பிரச்சினையைச் சிறப்பாக அணுகுவதற்கும், சமாளிப்பதற்குமுரிய வழிகளை அவர்கள் எனக்குக் கற்றுத் தந்தனர்.”*



*“எனது துணைவி போதைப்பொருள் உபயோகித்து வந்தார். நான் வேலைக்குப் போகின்ற வேளைகளில் வேறு வழியின்றி எனது பிள்ளைகளை அவளிடம் விட்டுச்சென்றேன். அவர்களுக்கு என்ன நடக்குமோ என நான் கவலைப்பட்டதுடன் நான் ஒரு மோசமான பெற்றோர் என எனக்குள் எண்ணிக்கொண்டேன். பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் பணியாளர், ஒரு குடும்பம் என்ற வகையில் எம்மிடத்திலிருந்த வலிமைகளை அவதானித்தார். பிள்ளைப் பராமரிப்பைப் பெறவும், எனது துணைவியை புணர்வாழ்வு மையத்திற்கு அனுப்பவும் எனக்கு அவர் உதவினார்.”*

*பிரகாசம் மிக்க எதிர்காலங்கள் திட்டமானது, NSW சமூக சேவைத் துறை மற்றும் அரசு சாராத அமைப்புக்களது கூட்டு முயற்சியால் NSW குடும்பங்களுக்கு தலையீட்டுச் சேவைகளை (intervention services) வழங்குகிறது.*

NSW Department of Community Services
New South Wales Government

இப்பிரசுரத்திலுள்ள நிழற்படங்களில் காணப்படுவோர் உரு மாதிரிகள் மட்டுமே.

© NSW Department of Community Services
(NSW சமூக சேவைகள் திணைக்களம்)
4 - 6 Cavill Avenue
Ashfield NSW 2131
(02) 9716 2222
www.community.nsw.gov.au


ISBN 1 74190 064 6 May 2007